and donation to National Defence Fund and the gold and the donations to Defence Fund received at the functions were handed over to local officials, as usual.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இதில் அமைச்சர்கள் மட்டும் தங்கப் பத்திரத்திற்காக எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : The question does not arise.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனியாகக் கேள்வி வேண்டும். அமைச்சர்களிடத்தில் அதிகமாகத் தங்கம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : அமைச்சர்களுக்கு மொத்தச் சுற்றுப்பிரயாண செலவு ரூ. 51,000 என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு அமைச்சரும் எவ்வளவு பிரயாணப் படி பெற்றுக்கொண்டார்கள் என்ற விவரம் கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. செ. மாதவன் : தேர்தல் பிப்ரவரியில் நடக்கும் என்றால், அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால் அமைச்சர்கள் அபிஷியல் டூர் போகக்கூடாது என்ற சம்பிரதாயத்தை போன முறை அனுசரித்தார்கள். அதே ஏற்பாட்டை இந்த முறையும் ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் பற்றி சென்ற முறை அல்லது அதற்கு முன்பு என்னென்ன கட்டுப்பாடுகள் அனுசரிக்கப்பட்டு வந்தனவோ, அவைகளெல்லாம் இப்பொழுதும் அனுசரிக்கப்படும்.

* 350 கேள்வி.— *திரு. எஸ். ஜே. ராமசாமி :* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ரஷ்யா, மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து திரும்பிய தொழில் அமைச்சர் அவர்களுக்கு நமது மாநில சர்க்கார் பிரயாணப்படி ஏதேனும் தந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

மின்சாரக் கம்பங்களுக்குச் சேதம்

* 351 கேள்வி—*திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :* கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 30—4—1966-ல் அடித்த புயலினால் திண்டிவனம் வட்டம், வானூர் தொகுதியில், குறிப்பாக வானூர் பிர்க்காவில் சாய்ந்து விட்ட மின்சாரக் கம்பங்களெல்லாம் நிமிர்த்தப்பட்டுவிட்டனவா ?

(இ) இல்லையெனில், அவற்றிற்கான காரணங்கள் யாவை ?

3rd November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Permanent rectifications in the alignment of poles were completed on 8th May 1966.

(b) Does not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது ஆங்கிலத்தில் இல்லாமல் தமிழில் சொன்னால் புரியும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'ஐ ஆம் ஸாரி' தமிழில் கீழே இருக்கிறது. அதைப் பார்க்கவில்லை. இப்பொழுது தமிழில் பதில் சொல்கிறேன்.

(அ) இக்கம்பங்கள் எப்போதும் சாயாமலிருப்பதற்கான நிலை ஏற்பாடுகள் 8-5-1966-ல் செய்து முடிக்கப்பட்டன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 30-4-1966-ல் புயல் அடித்தது. புயல் அடித்து குறைந்தது 1½ மாதங்கள் வரைக்கும் எனது பகுதியிலே கம்பங்கள் நிமிர்த்தப்படவில்லை. கேட்டால் "சொந்தச் செலவில் வேண்டுமானால் நீங்கள் செய்துகொள்ளுங்கள்" என்று பதில் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்தக் கம்பங்களை நிமிர்த்திவிட்டார்கள் என்று சொல்கிறார்களா? நான்காவது மாதத்தில் நடந்த நிகழ்ச்சி. இப்பொழுது கம்பங்கள் நிமிர்த்தப்பட்டுவிட்டன என்று சொன்னால் அதை எப்படி புரிந்து கொள்ள முடியும்? அதே நேரத்தில் இனிமேலாவது அதே மாதிரி தாமதம் இல்லாமல் நடப்பதற்கு வழிவகை செய்வார்களா?

(பதில் இல்லை)

மின்சார வசதி

*352 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் மேற்படியூர் காலனிக்கு 90 தெரு விளக்குகள் போடவேண்டி 25-9-1965-ல் மேற்படி பஞ்சாயத்தால் நிறைவேற்றப்பட்டு மின்சார இலாகா திண்டிவனம் A.E.-க்கு அனுப்பப்பட்ட தீர்மானத்தின்பேரில் இதுவரைக்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததற்கு காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மரக்காணம் நகர பஞ்சாயத்தில் 25 கூடுதல் தெரு விளக்குகளையும் அவ்வூர் காலனிக்கு 10 தெரு விளக்குகளையும் போடுமாறு மரக்காணம் நிர்வாக அதிகாரியிடமிருந்து வேண்டுகோள் வந்தது. தமிழ்நாடு மின்சார போர்டு வகுத்த திட்டத்தின்மூலம் கிடைக்கும் மொத்த லாபம் 10 சதவீதத்துக்குக் குறைவாக இருந்தால், அது லாபமற்ற திட்டமெனத் தெரிய வந்தது. கூடுதல் மின்சார இணைப்புகளைப் பெற